மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1975) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1975.)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* THIRU A. R. DAMODARAN : Sir, this amendment generally seeks to raise the minimum age of the workers from 15 to 16 and I presume that it will include those not only in passenger buses but also in goods vehicles, and this is based on the model Central Act which has been accepted by our State and I believe the idea is to raise the age from 15 to 16. It is a very good intention. I think that if we extend this to the Motor Transport Workers Act, then it is equally essential that the Hon. the Minister for Labour should consider whether it should not be applied—I think it is already applicable to industries and factories—to the shops and establishments, the catering establishments and to cinemas. The object of this amendment is to see that compulsory

---

@ 138. . ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

education is provided to all persons up to the age of 16. The State has provided educational facilities at a terrific cost of more than 120 to 130 crores of rupees, of which about 89 crores of rupees are being spent on primary and secondary education and we have to express our sympathy with the idea that compulsory education should be provided to every child in the State up to the age of 15 or 16, i.e., up to S.S.L.C. Making this applicable to only the Motor Transport Workers Act is a good beginning in the sense that most of the boys who are appointed as cleaners or conductors in these lorries are well below the age of 16 and they should really be in schools. I hope, Sir, that the Hon. the Minister for Labour will kindly let us know whether he is considering the extension of this to the Shops and Establishments Act because it is in this category that lakhs of boys are being employed and young boys are employed in grocery shops and retail shops of general goods. Most of these boys are in the age group of 12—14 and they should really be in schools. It is essential for any modern Welfare State which spends such a lot of money on education to consider the desirability of extending this to shops and establishments also. I realise that there is likely to be a great deal of opposition to this idea but nonetheless I think it is the responsibility of the State to see that this is achieved.

Then, Sir, having said this, may I ask the Government also to consider whether, with a view to achieving the object of compulsory education, we can do anything with regard to a number of children even below the age of 14 employed in domestic homes and in the agricultural sector, who are not going to schools? Are we going to bring in some sort of legislation in this regard? I do not think any legislation will succeed as far as this sector is concerned. I would therefore, plead that the Commissioner of Labour, at least in our State, should start an educative campaign whereby we can make the parents in farms and other rural areas realise that their children, if taken away from schools, will only be perpetual landless labourers or domestic servants, without any means of improving their careers. This could very well be a part of the educative campaign on the part of the Ministry of Labour. Now that television has been introduced in Madras, Sir, this can be one of the projects that could be taken up and much propaganda

can be done so that people realise that the taking away of a child from schools is probably the greatest crime that they can commit under the present condition of our society. Thank you, Sir.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு ஏற்ப இந்த அரசு பல சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவர வேண்டுமென்று விரும்பி பல காரியங்களை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாடு கேட்டரிங் எஸ்டாபிளிஸ்மென்ட்ஸ் ஆக்ட் என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றி, 15 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை ஓட்டல், ரெஸ்டாரன்ட், உணவகங்கள் போன்றவற்றில் நியமிக்கக் கூடாது என்று செய்திருக்கிறோம். அதேமாதிரியாக பிளான்டேசன்களில் 15 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என்ற ஒரு சட்டத்தை உருவாக்க ஆலோசனை செய்துகொண்டிருக்கிறோம். பீடித் தொழிற்சாலைகளில் 15 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை நியமிப்பதைத் தடுக்கும்பொருட்டு, ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவர, 1966 ஆம் ஆண்டிலிருந்தே முயற்சி நடந்து கொண்டு வருகிறது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டில் சில ரிட்டுகள் இருக்கின்ற காரணத்தால்தான், அது இன்னமும் நடைமுறைக்கு வராமல் இருக்கிறது. இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் மூலமாக 15 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுவதுடன், உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து நிறைவேறவும் முடிந்த அளவுக்கு வாய்ப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்களை நிறை வேற்ற வேண்டுமென்ற ஆலோசனையை ஐ.எல்.ஓ. இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, இப்பொழுது இந்த அவையில் நிறைவேற்றப்படுவதற்காக வந்திருக்கிறது. இந்த நல்ல சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அனைவரும் ஒருமித்த ஆதரவை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1975) நிறை வேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

'சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1975) நிறை வேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-22)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

* 1. Notification issued with G.O. Ms. No. 37. Prohibition and Excise, dated the 5th February 1975 empowering Officers of State Prohibition Intelligence Bureau to exercise certain powers **and**